
உ

மருதனார்மடம்

# இராமநாதேஸ்வரர் (சமாதி) ஆலய வரலாறு





**இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

**24-06-2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதனார்மடம்

# இராமநாதேஸ்வரர் (சமாதி)

## ஆலய வரலாறு



வெளியீடு :

பழைய மாணவர் சங்கம்,

யா/இராமநாதன் கல்லூரி.

24-06-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | :- | இராமநாதேஸ்வரம் (சமாதி ஆலயம்) |
| வெளியீடு | :- | பழைய மாணவர் சங்கம்,<br>யா/இராமநாதன் கல்லூரி. |
| பதிப்பு | :- | ஆனி, 2015 (24.06.2015) |
| நூலாசிரியர் | :- | திருமதி.கலாபூஷணம் பண்டிதை<br>வை.கணேசபிள்ளை. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ඩී. එම්. ස්වාමිනාදන්
නැවත පදිංචි කිරීම, ප්‍රතිසංස්කරණය හා හින්දු ආගමික කටයුතු අමාත්‍ය

டி. எம். சுவாமிநாதன்
மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

D. M. SWAMINATHAN
Minister of Resettlement, Reconstruction and Hindu Religious Affairs

# D.M சுவாமிநாதன் அவர்களின் ஆசிச்செய்தி

சிவபூமி எனப் போற்றப்படும் இலங்கைத் திருநாட்டின் யாழ்ப் பாணம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள இராமநாதேஸ்வரர் ஆலயத்தின் ஆனி உத்திர திருக்கல்யாண நிகழ்வில் ஆலய வரலாற்று புத்தகம் வெளியிடுவது ஒரு பொருத்த மான நாளாக அமைகின்றது.

"அரிது அரிது மானிடர் ஆதல் அரிது. அதிலும் கூன், செவிடு, குருடு, நீங்கி பிறத்தல் அதைவிட அரிது. இவ்வாறான அரிய பெரும்பிறவியாகிய மானிடப்பிறவி எடுத்த நாங்கள் செய்வதற்கு அரிய பொதுப்பணிகளைச் செய்வது என்பது அரிது. அரிய பெரும் பணிகளைச் செய்த இராமநாதன் ஐயா அவர்களுடைய பணிகளில் ஒன்றாக இவ்வாலயமும் அமைக்கப்பட்டது. இங்கு இவருடைய சமாதியும் இருப்பது குறிப்பிடத்தக்கது. சிவப்பணிகளில் ஒன்றான இவ்வாலயம் ஆகமவிதி முறைகளுக்கு அமைவாக கருங்கல்லினால் அமையப் பெற்று நித்திய பூஜைகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவ்வாலய வரலாற்று சிறப்பு வெளியீட் டினைச் செய்யும் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வாழ்க வளமுடன்**

**சுபம்**

## டி.எம்.சுவாமிநாதன்

கௌரவ அமைச்சர்,

மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்லூரி அதிபரின் ஆசிச் செய்தி

யாழ்/ இராமநாதன் கல்லூரி வளாகத்தில் அமைந்திருக்கும் இராமநாதேஸ்வரர் சமாதி ஆலய வரலாறு ஒன்று வெளிவருவதையிட்டு யான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாலயத்தின் கருவறையில் லிங்கவடிவினராக இராமநாதேஸ்வரப் பெருமான் எழுந்தருளியிருந்து எல்லோருக்கும் அருள் பாலித்து வருகின்றார். ஆண்டு தோறும் குருபூசைத் தினமும் மணவாளக் கோல விழாவும் அன்னதானமும் நடைபெற்று வருகின்றது. **1992, 2003, 2014** ஆண்டுகளில் மகா கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன. ஆனால் **80** ஆண்டுகட்கு முன்பு எழுந்த இவ்வாலயம் பற்றிய சரியான வரலாறு தெளிவாக யாவரும் அறிந்திலர். இந்த நிலையில் வரலாறு ஒன்றைப் பழைய மாணவர் சங்கம் வெளியிட முன்வந்தமையைப் பாராட்டுகின்றேன். சென்ற வருடம் **2014**ல் மண்டலாபிஷேகத்தில் ஆலய பிரதமகுருவாக இருந்த சின்மயசர்மா அவர்கள் எடுத்த முயற்சியும் தடைப்பட்டது. இந்தவருடம் ஆனி உத்திரத்தில் இராமநாதேஸ்வரருக்கு நடைபெறும் மணவாளக்கோல விழாவின் போது சமாதி ஆலய வரலாற்றைப் பழைய மாணவர் சங்கம் வெளியிடத் திருவருள் பாலித்திருப்பது ஒரு வரப்பிரசாதமாகும். இவ்வெளியீடு இடையூறின்றிச் சிறப்பாக அமைய மனம் நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துக்களையும், ஆசிகளையும் தருகின்றேன். யாவருக்கும் இந்நூல் பயன்பட வேண்டுமென்றும் யாவரும் இதனைப் பேணிப் பாதுகாக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு இச்செயற்பாட்டில் ஈடுபட்ட அனைவருக்கும் இராமநாதேஸ் வரர் அருள்கிடைக்க வேண்டுமென்றும் வாழ்த்தி வணங்கி நிற்கின்றேன்.

**திருமதி. கமலராணி கிருஷ்ணபிள்ளை**

அதிபர்

யா/இராமநாதன் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதி அதிபரின் வாழ்த்துச்செய்தி

இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மருதனார்மடம் என்ற இடத்தில் திலகம் வைத்தாற்போல் அமைந்துள்ள இராமநாதன் கல்லூரியில் நாற்புறமும் அழகான சூழலில் அமைந்துள்ள இராமநாதேஸ்வரர் ஆலயத்தில் சமாதி நிலையில் அமைந்துள்ள சேர்.பொன்.இராமநாதவள்ளல் அவர் களின் சமாதி வரலாற்றினை நூல் வடிவில் பழைய மாணவர் சங்கம் வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றேன். திருமதி. லீலாவதி இராமநாதனும், அவரது மருகர் திரு.சு.நடேசபிள்ளை யும் எனது பேரனார் பிரதம கிளாக்கர் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படுகின்ற திரு.தம்பித்துரை (சேர்.பொன். இராமநாதவள்ளல் அவர்களின் நம்பிக்கைக்குரியவர்) அவர் களும் இணைந்து இச்சமாதி ஆலயத்தைக் கட்டியுள்ளார்கள். இவ் ஆலயத்தில் இறைவனடி சேர்ந்த சேர்.பொன்.இராமநாத வள்ளலை சமாதி நிலையில் அமரச் செய்து அதன் மேல் சிவலிங்கம் அமைத்து நாளாந்த பூஜைகளும் அபிடேகமும் நடை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இராமநாதேஸ்வரர் என்ற பெயருடைய இச்சமாதி ஆலய வரலாற்றை அறியாதவர்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும். எல்லாம் வல்ல இறைவனது துணையுடன் இந்நூல் சிறப்பாக வெளிவர இராமநாதேஸ்வரப் பெருமானைப் பணிகின்றேன்.

**திருமதி. நந்தினி சிவராஜன்**

பிரதி அதிபர்,

யா/இராமநாதன் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னுரை

"கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடும் கருணாகரக் கடவுளே திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்."

தெய்வீகப் பொலிவும் கவின்கலை மிளிர்வதுமான யா/இராம நாதன் கல்லூரியில் அமைந்த சமாதி ஆலயம் பற்றியும், நடராஜர் ஆலயம் பற்றியும் எழுதுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

யான் இக்கல்லூரியில் நீண்ட காலம் ஆசிரியராக இருந்து இந்துமன்றப் பொறுப்புக்களையும் செய்துள்ளேன். இதனால் பலரும் சமாதி ஆலயம் பற்றிக் கேட்பார்கள். இதுபற்றி அறியும் ஆவலுடையோர் பலர் இன்றும் இருக்கின்றனர். இது பற்றிய விளக்கங்கள் நூல்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பலர் குறிப்பிட்டுள்ளனர். தனியாக ஒரு ஆவணம் இருக்கவில்லை.

இதனால் முன்பு ஆலயக் குருவாக இருந்த சின்மய சர்மா அவர்கள் சமாதி ஆலயம் பற்றி எழுதித் தரும்படி கேட்டிருந்தார்கள். அறங்காவலர் சபைத் தலைவர் D.M. சுவாமிநாதன் (பா.உ) அவர்களுடைய சம்மதத்தின் பேரில் 02.02.2014 இல் வெளியிடப் போவதாகக் கூறியிருந்தார். ஏதோ காரணத்தால் அது வெளியிடப் படவில்லை. உடுவில் பிரதேச செயலகமும் சமாதி ஆலயம் பற்றி எழுதித் தரும்படி கேட்டு எழுதியுள்ளேன். இவற்றைக் கல்லூரி வெளியிடுவது நல்லது என்ற கருத்தைப் பழைய மாணவர் சங்கத்திடம் கூறினேன். அவர்கள் அதிபர் சம்மதத்துடன் தாமே வெளியிடுவதாகக் கூறினர். அவ்வாறே அறங்காவலர் சபைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவரும் சேர். பொன். இராமநாதன் அவர்களின் வாரிசுமாகிய D.M. சுவாமிநாதன் (பா.உ) அவர்களின் சம்மதத்துடனும் ஆசியுடனும், அதிபர், பிரதி அதிபர் உதவியுடனும் பழைய மாணவர் சங்கத்தினர் இந்நூலை 24.06.2015 புதன்கிழமை ஆனி உத்திரத் திருவிழாவின் போது (மணவாளக் கோலவிழா) வெளியிடுகின்றனர். 18.07.2003ல் திருவூஞ்சல் ஒன்றும் பழைய மாணவர் சங்கத்தால் வெளியிடப்பட்டது. சமாதி ஆலய வரலாற்றுடன் நடராஜர் ஆலய வரலாறும், ஊஞ்சல் பாக்களும் இணைக்கப்பட்டு இந்நூல் வெளிவருகிறது. இது ஒரு ஆவணமாகப் பேணிப்பாதுகாக்க வேண்டிய ஒன்றாகும். இந்நூல் வெளிவரப் பாடுபட்ட அனைவருக்கும் பழைய மாணவர் சங்கத்தினருக்கும் அச்சகத்தினருக்கும் நடராஜப் பெருமான் அருள் கிடைக்கட்டும்.

- நன்றி -

**கலாபூஷணம்:- வை.கணேசபிள்ளை**
**முன்னாள் ஆசிரியை,**
**ப.மா.ச உறுப்பினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர். பொன் இராமநாதன் அவர்களின் சமாதி (இராமநாதேஸ்வரம்) ஆலய வரலாறு

ஈழமணித் திருநாட்டின் வடபால் இருப்பதும், சைவச் சான்றோர் களையும் ஞானிகளையும் தோற்றுவித்தது யாழ்ப்பாணப் பட்டினம். இதன்பால் பல ஞானிகளின் சமாதிகளைத் தாங்கி நிற்பது மருதனார்மடம். இங்கே சேர். பொன். இராமநாதனுடைய சமாதி ஆலயம் விளங்குவது மேலுமொரு சிறப்பினை உடையது. இது யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ளது. தெற்கு நோக்கி அமைந்துள்ளது. தெற்கே அமைந்த பல்லப்ப வைரவர் ஆலயத்தையும் சமாதி ஆலயத்தையும் ஊடறுத்துச் செல்வது உரும்பிராய் வீதி.

இவ்வாலயம் இற்றைக்கு எண்பது ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. இராமநாதன் கல்லூரி வளாகத்தில் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ளது. தெற்கு நோக்கி அமைந்துள்ள இவ் ஆலயம் தனிக் கருங்கற் பொழிவினால், திராவிட சிற்பமுறை தழுவிக் கட்டப்பட்ட சிறப்பினையுடையது. மேற்கூரை, விமானம், தூண்கள், நிலம், படிகள், நந்தி, பலிபீடம் யாவும் கருங்கற் பொழிவினால் ஆனவை. இருபது தூண்கள் ஆலயத்தைத் தாங்கி நிற்கின்றன. கருவறையில் இராமநாதன் அவர்களின் சமாதி மேல் லிங்கப் பிரதிட்டை அமைந்துள்ளது. தூண்களில் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. நாயன்மார்களின் (சமய குரவர்) உருவங்கள், இராமர், மகாவிஷ்ணு, முருகன், விநாயகர், சிவன் பார்வதி முதலிய தெய்வங்களும் புராண இதிகாசக் கதைகள் கூறும் இரணிய வதம் போன்ற கதைகளும் சிறப்பாக வடிவமைக்கப் பட்டுள்ளன. அருகே அமைந்த வசந்த மண்டபத்தில், பார்வதி பரமேஸ்வரன், விநாயகர், முருகன், கோதண்ட இராமன், நடராஜர், சண்டேசுவரர் முதலிய எழுந்தருளி விக்கிரகங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே அமைக்கப் பெற்றிருந்த சமாதிக் கட்டடத்தைக் கோயிலாகக் கருங்கற்றளியாகக் கட்டியவர் சேர். பொன். இராம நாதன் அவர்களின் மனைவி லேடி இராமநாதன் ஆவர். இவருக்கு உறுதுணையாக நின்றவர்கள் இவரது மருகர் திரு. சு. நடேசபிள்ளை அவர்களும், அப்பொழுது இருந்த தலைமைக் கிழாக்கர் தம்பித்துரையுமாவர்.

## சமாதி ஆலயத் தோற்றம்

பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற வாழ்க்கைப் படிநிலைகளில் வாழ்ந்து, அருட்பரானந்த சுவாமி களிடம் குரு உபதேசம் பெற்று முழுத்துறவு பூண்டு வாழ்ந்த ஆத்ம ஞானியே சேர்.பொன்.இராமநாதன் அவர்கள். இவர் 1851 ஆம் ஆண்டு மானிப்பாயைச் சேர்ந்த பொன்னம்பலம் முதலியாருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் 2வது மகனாக அவதரித்து எண்பது ஆண்டுகள் நிலவுலகில் வாழ்ந்து செயற்கரிய சாதனைகளை நிலை நாட்டி 1930ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 26ம் நாள் இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

இவர் இறைபதம் அடைந்த கொழும்பு உவார்ட் பிளேசிலுள்ள சுகவாசஸ்தலத்தில் இருந்து இவரது பூதவுடல் கொழும்பு புகையிரத நிலையத்திற்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. இலட்சோ இலட்சம் மக்கள், அரசினர், அறிஞர்கள், கல்விமான்கள் அஞ்சலி செலுத்திய பின் புகையிரத மூலம் அவரது பூதவுடல் யாழ்ப் பாணத்துக்குக் கொண்டு வரப்பட்டது. சமாதி அடைந்த இராமநாதன் அவர்களின் பூதவுடல் அபிடேகம் செய்யப்பெற்று, விபூதி, சந்தணம், உருத்திராக்க மாலை அணியப்பெற்று புலித்தோல் ஆசனத்தில் அமர்த்தப்பட்டு, மஞ்சள் பட்டினால் போர்க்கப்பட்டபோது அவரது முகமும் உடலும் தெய்வீகப் பொலிவுடனும் அமைதியாகவும் காணப்பட்டது. பூதவுடல் தெய்வீகப் பொலிவுடன் ஏற்கனவே அலங் கரிக்கப்பட்டிருந்த சமாதி ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டது. சமாதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகள் யாவும் சுன்னாகத்தைச் சேர்ந்த பண்டிதர் மாணிக்கத் தியாகராசா அவர்களால் நிறைவேற்றப்பட்டன. விபூதி, கற்பூரம், உப்பு என்பவற்றால் நிரப்பப்பெற்ற குழியில் அவரது புனித உடல் அமர்த்தப்பட்டு மூடப்பட்டு மேலே லிங்கப் பிரதிட்டை வைக்கப்பட்டு அபிடேக ஆராதனை வழிபாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஆண்டு தோறும் இராமநாதன் குருபூசைத்தினம், மணவாளக் கோல விழா சிறப்பாகக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்களினால் கொண்டாடப்பட்டு வருகின்றது. மணவாளக் கோலவிழாவின்போது பார்வதி சமதே இராமநாதேஸ்வரருக்கு ஊஞ்சல் வைபவமும் நிகழும்.

## அறுபது ஆண்டுகளின் பின் நடந்த கும்பாபிஷேகங்கள்

1930 இல் அமைக்கப்பட்ட ஆலயம் நாட்டில் ஏற்பட்ட அசம்பா விதங்களால் கூரை, தூண்கள் பழுதடைந்தன. புனருத்தாரண வேலைகளுக்காக லிங்கம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. கும்பா பிஷேக்தை நடாத்த முடியாத நிலை காணப்பட்டது. இந்த நிலையில் 1990ஆம் ஆண்டு கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்டிருந்த சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரின் பேர்த்தி திருமதி. மங்கையற் - கரசி திருச்சிற்றம்பலம் அவர்கள் முழுக்கவனம் எடுத்தார்.

இவரது விடாமுயற்சியினால் துர்க்கா துரந்தரி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் உறுதுணையோடு பழு தடைந்த தூண்கள் சரிபார்த்தும், திருத்த வேலைகள் செய்யப்பட்டும் 1992ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி அப்பொழுது இருந்த ஆலயப் பிரதகுரு சோமஸ்கந்தக்குருக்கள் தலைமையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இது லிங்கம் பாலஸ்தானம் செய்து வைத்து, புனருத்தாரண வேலைகள் முடித்துச் செய்யப்பட்ட கும்பாபிஷேகமாகும். ஆலயம் எழுந்து அறுபது ஆண்டுகளின் பின் நடைபெற்ற முதற் கும்பாபிஷேகம் என்பது பெருமைக்குரியதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இதனைத் தொடர்ந்து பூசை வழிபாடுகள், மணவாளக்கோல விழா, இராமநாதன் குருபூசை யாவற்றையும் இராமநாதன் அறங்காவலர் சபை ஒத்துழைப்புடன் கல்லூரிச் சமூகமும், பழைய மாணவர் சங்கமும் இணைந்து செய்து வந்தது. இந்த வகையில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்படும் இரண்டாவது புனரா வர்த்தன கும்பாபிஷேகம் 06.07.2003ஆம் ஆண்டு நடைபெற்றது. இக்கும்பாபிஷேகத்தைப் பிரதம சிவாச்சாரியாராக இருந்து சி. சு. தியாகராசக் குருக்கள் (தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் கோயில்) நடத்தி வைத்தார். அப்போது கல்லூரி அதிபராக இருந்த திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்களின் தலைமையில் இக் கும்பாபிஷேகம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் ஆலய பிரதம குருவாக இருந்தவர் சிவஸ்ரீ க.குகானந்தக் குருக் களாவார். இவரைத் தொடர்ந்து சுதன்சர்மா அவர்கள் ஆலயபிரதம குருவாக இருந்து பூசை வழிபாடுகளை நடாத்தி வந்தார். (ஆரம்ப காலத்திலிருந்தே ஆலயக் குருமாராகப் பலர் இருந்து வந்துள்ளனர். அவர்களது பெயர் விபரங்கள் எடுக்க முடியவில்லை.)

மீண்டும் ஆலயத் திருத்த வேலைகள் பல செய்ய வேண்டி யிருந்தன. ஆலயக்கூரையில் வெடிப்புக்கள் காணப்பட்டன. இவற்றை உரிய முறையில் திருத்தியமைக்க சேர். பொன் இராம நாதன் அவர்களின் வழித்தோன்றல் கௌரவ அமைச்சர் D.M. சுவாமிநாதன் (பா.உ) அவர்கள் முன்வந்தார். இந்தியச் சிற்பிகளை வரவழைத்து சிறந்த முறையில் திருத்த வேலைகளை முடித்துப் பிராயச்சித்த கும்பாபிஷேகம் ஒன்று நிகழ்த்தி ஆனி உத்தர மணவாளக்கோல விழா சிறப்பாக நடைபெற்றது. பூசைகள் ஒழுங்காக நடைபெறுவதற்கு அந்தணர்களையும், திருப்பணி வேலைகளுக்கு தொண்டரையும் நியமித்து தந்துள்ளார். தற்போது ஆலயப் பொறுப்புக்கள் யாவற்றையும் தாமே ஏற்று நடாத்த முன்வந்துள்ளார். இது போற்றப்பட வேண்டியதொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இராமநாதேஸ்வர மஹா கும்பாபிஷேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலயத்தினுள்...



அபிஷேக ஆராதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை காலமும் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினாலும் பாதிக்கப்பட்ட ஆலயங்கள், கல்லூரி என்பன பல இடர்பாடுகளை எதிர்கொண்டது. ஆலயப் பூசை வழிபாடுகளைச் செய்ய போதிய பண வசதி இல்லாத குறைபாடுகள் இருந்து வந்துள்ளன. ஆயினும் கல்லூரிச் சமூகம் இராமநாதன் அறங்காவலர் உதவியுடன் ஆலயங் களைச் சிறந்த முறையில் கவனித்து வந்தது. கௌரவ அமைச்சர் D.M. சுவாமிநாதன் அவர்கள் ஆலயத்தைப் பொறுப்பேற்றதும் கல்லூரிச்சமூகத்திற்கு இதுவரை இருந்து வந்த சிரமங்கள் குறைந்து விட்டன.

தற்போது ஆலயம் பல்வேறு திருப்பணிகளால் சிறந்து விளங்குகின்றது. தற்போதுள்ள அதிபர் திருமதி. கமலராணி கிருஷ்ணபிள்ளை அவர்களின் அயராத முயற்சியினால் பல திருப் பணிகள் சமாதி ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்டன. நேரடியாகவும் தொலைபேசி மூலமும் கௌரவ அமைச்சர் D.M. சுவாமிநாதனுடன் தொடர்பு கொண்டு சமாதி ஆலயம் சிறக்கவும் ஆலயச் சுற்றுப் புறச்சூழலைப் பாதுகாக்கவும் பல செயற்பாடுகளை அதிபர் மேற்கொண்டு வருகின்றார். ஆலய மதில்கள் திருத்தப்பட்டுள்ளன. சூழல் சுற்றுப்புறங்கள் யாவும் திருத்தப்பட்டு, பூந்தோட்டம் அமைத்தும் ஆலயத்திற்கேயுரிய கேணியும் திருத்தி அமைக்கப் பட்டுள்ளன. ஆலயச் சுற்றுப்பிரகாரம் நிலம், நடைபாதை யாவும் சீமெந்து போடப்பட்டுள்ளது. கல்லும் முள்ளுமாக இருந்த இடங்கள் சீமெந்து நிலமாக மாறியமை தொண்டர்கள் வழிபாடாற்றுவதற்கு இலகுவாகவும் வசதியாகவும் அமைந்துள்ளது. மக்களுடைய தரிசனத்திற்காக ஆலயம் திறந்து விடப்பட்டுள்ளது. மீண்டும் விஜய வருடம் தைத்திங்கள் 9ம் நாள் (22.01.2014) புதன்கிழமை இராமநாதேஸ்வரப் பெருமானுக்குப் பிரம்மஸ்ரீ பாலசண்முகக் குருக் கள் புனருத்தாரண மகாகும்பாபிஷேகத்தை அதிபர்.திருமதி. க.கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடாத்தி வைத்துள்ளார். ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளார்ந்த பூசைகளை சின்மயசர்மா அவர்கள் செய்து வந்தார். தற்போது ஆலய நாளார்ந்த பூசைகளை சிவஸ்ரீ அகிலேஸ்வரக் குருக்கள் செய்து வருகின்றார். யாவற்றையும் அறங்காவலர் சபைத்தலைவர் கௌரவ அமைச்சர் D.M. சுவாமிநாதன் (மீள்குடியேற்றம், மீள்கட்டுமானம் மற்றும் இந்துமத விவகார அமைச்சு) அவர்களே நடத்துகின்றார்.

ஆண்டுதோறும் ஆனி உத்திரத்தில் மணவாளக்கோல விழாவும் இராமநாதேஸ்வரப் பெருமானுக்கு நடைபெற்று வருகின்றது. பெருமான் திருவூஞ்சலில் பார்வதி சமேதராக காட்சி தருவார். சேர்.பொன். இராமநாதன் அவர்களின் குருபூசை தினமும் கார்த்திகைத் திருவோணத்தில் பூசை வழிபாடுகள், அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்களால் ஆலயத்தில் பக்தி பூர்வமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## இராமநாதன் கல்லூரியிலே அமைந்துள்ள நடராஜர் ஆலய வரலாறு

## (ஆடவல்லானுக்கு ஓர் ஆலயம்)

ஆடவல்லான் நடராஜப் பெருமானுக்கு ஆலயம் அமைத்தவர் சேர்.பொன் இராமநாதன் அவர்கள். ஆத்மீகச் சிந்தனைகளுக்கு நிலைக்களமாக அமைபவை ஆலயங்கள். ஆதியில் தெய்வீக கலைகள் வளரும் இடமாக ஆலயங்கள் விளங்கின. இந்த உண்மையை நன்கு புரிந்து கொண்ட சேர். பொன் இராமநாதன் அவர்களின் ஆத்மீகச் சிந்தனையின் வெளிப்பாடே இக்கல்லூரியில் அமைந்த சிவகாமசுந்தரி சமேத சிதம்பர நடராஜர் ஆலயமாகும். ஆடவல்லானுக்கு கோவில் அமைத்து கல்வி கலைஞானம் வளர்ந்தோங்கச் செய்தவர் சேர். பொன் இராமநாதன் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பல்வேறு பணிகளிலும் முதன்மை பெற்றது கல்விப் பணியே. கல்வி கடவுள் வழிபாட்டுடன் கூடியதாகவும், திரிகரண சுத்திக்கும் காரிய சித்திக்கும் அடித்தளமாக அமைய வேண்டு மென்று விரும்பினார். இதன் பேறாக 1913ம் ஆண்டு மருதனார் மடத்தில் வடகீழ்ப்பகுதியில் இருபத்தைந்து ஏக்கர் நிலப்பரப்பில் இந்து தமிழ்ப் பெண்களுக்கெனத் தனித்துவமான கல்லூரியைக் கட்டினார். "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்" என்ற பாரதி வழி நின்று கல்லூரியும் இணைத்துக் கட்டப் பெற்றதே இவ் வாலயமாகும்.

இவ்வாலயமானது கல்லூரியின் மேற்குப்புறவாயில் முகப்பில் மேல் மாடியில் அமைந்துள்ளது. ஒரு நூற்றாண்டு காலத்திலும் காலத்தால் அழியாத நினைவாலயமாக விளங்குகின்றது. சைவ மணமும் தமிழ் மணமும் ஒருங்கிணைந்து வளரும் இக்கல்லூரிக்கு இவ்வாலயம் ஒரு வரப்பிரசாதமாகும்.

மேல்மாடியில் அமைந்த இவ்வாலாயத்தைப் பாரிய இரும்புத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. பிரதானவாயிலூடாகக் கல்லூரி மண்டபத்துள் நுழையும் பொழுதே சரஸ்வதி மண்டபம் அமைந் திருத்தலைக் காணலாம். மேல் மாடிப் படிக்கட்டின் மேல் மாடத்தில் கல்லூரித் தெய்வம் கலைமகள் அமர்ந்திருப்பது கண் கொள்ளாக் காட்சியாகும்.

நவராத்திரி காலங்களில் படிக்கட்டுக்கள் வண்ணக் கோலங் களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். படிக்கும்பங்கள் தீபங்கள் ஏற்றப்பட்டிருக்கும். கலைத் தெய்வத்திற்கு கொலு வைத்து விஷேட ஆராதனைகள் நடைபெறும்.

படிக்கட்டு வழியே சென்று ஆடவல்லானையும், சிவகாம சுந்தரியையும் தரிசிக்க வாய்ப்பு உண்டு. பாரிய இரும்புத் தூண்கள் தாங்கி நிற்கும் ஆலயம் பலம் வாய்ந்த பலகைகளினால் அமைந்த நிலப்பகுதியையும், ஓட்டினால் வேயப்பட்ட கூரையையும், அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைத்து அடிக்கப்பட்ட பலகைகள் வர்ண வேலைப்பாடுகளுடன் கூடியதாக அமைந்துள்ளது. பாரிய மரக்கதவுகள் ஆங்காங்கே பொருத்தப்பட்டுள்ளன. ஆலயத்திற்குத் தேவையான பொருட்கள் வைப்பதற்குக் களஞ்சிய அறை, காண்டாமணி அடிப்பதற்குரிய அறை வடக்கும், தெற்குமாக அமைக்கப்பட்டுள்ளது.

மரத்தினாலான அழகிய வேலைப்பாடுகளோடு கூடிய ஆலயம் போன்ற அமைப்பில் செய்யப்பட்டு யாழிகள் பொருத்தப்பட்ட பீடத்தில் ஆடவல்லான் நடராஜப்பெருமான் சிவகாமசுந்தரி சமேத ராக இருக்கை கொண்டு அருள் பாலித்துக் கொண்டிருத்தலைக் காணலாம். பெருந்தொகையான மாணவர்களும் ஆசிரியர்களும் வழிபடக்கூடிய வழிப்பாட்டுத்தலமாக இது அமைந்துள்ளது.

ஆலயத்திற்கென அமைத்த பூந்தோட்டத்தில் மலர்கள் பறித்து மாலைகள் தொடுத்து இறைவனுக்குச் சாத்தி வழிபடுவதும், நிறுவுநரால் தெரிவு செய்த திருமுறைப்பாடல்களைப் பண்ணோடு பாடுவதும், காலை, மாலை வேளைகளில் பூசையிற் கலந்து கொள் வதும் விடுதி மாணவர்களின் அன்றாட நிகழ்வுகளாகும். ஆட வல்லானுக்குரிய அபிடேகங்கள் யாவும் நவராத்திரி, சிவராத்திரி, விழாக்கள், நாயன்மார்கள் குருபூசைகள், திருமுறை விழாக்கள் யாவும் இவ்வாலயத்தில் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

**புனருத்தாரண வேலைகள்**

இத்தகைய ஆலயமானது ஒரு நூற்றாண்டு பழமை வாய்ந்தது. காலத்திற்கு காலம் ஏற்பட்ட அனர்த்தங்களினாலும் முதுமையி னாலும் தன் தனிப் பொலிவை இழந்தது. மேற்கூரை, சுற்றிவர அமைந்த கட்டடங்கள், நிலப்பகுதி, கதவுகள் பழுதடைந்தன. இதனைக் கண்ணுற்ற (அப்பொழுது கல்லூரியில் தங்கி இருந்த) துர்க்காதுரந்தரி அம்மா அவர்கள் 1998ஆம் ஆண்டு மூன்று லட்சம் ரூபா செலவில் ஓரளவு திருத்த வேலைகள் செய்து அதே ஆண்டில் கும்பாபிஷேகமும் நடாத்தி வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறை விழாவின்போது










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதேஸ்வரர்
ஆலயத்தில் காணப்படும்
சிற்பங்கள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து ஆலயம் பழுது பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்ட பொழுது அதிபராக இருந்த சிவஞானசுந்தரம் அதிபர் அவர்களும், ஆசிரியர்களும் நலன்விரும்பிகளும் பழைய மாணவர்களிடம் உதவிகோரி நின்றனர். இதனைச் செவிமடுத்த கனடாப் பழைய மாணவர் சங்கம் திருத்த வேலைகளைச் செய்து தர முன்வந்தது. அவுஸ்ரேலியா, இலண்டன் பழைய மாணவர்களும் இவர்களுடன் இணைந்து கொண்டனர். திருத்த வேலைகளுக்காக 2009ஆம் ஆண்டு நடராஜர் சிவகாமசுந்தரி சமேதராக இலிங்கம் ஏனைய விக்கிரகங்கள் யாவும் சமாதி ஆலயத்துள் வைக்கப்பட்டு பூசை வழிபாடுகள் நடைபெற்றன. வழிபாட்டுக்குரிய தலம் நிலை குலைந்ததால் கல்லூரி பல வழிகளிலும் பாதிக்கப்பட்டது.

50 இலட்சம் ரூபாவை பழைய மாணவர்கள் திருத்த வேலைகட்குச் செலவழித்திருந்தனர். திருத்த வேலைகள் பல்வேறு தடைகளை எதிர்கொண்டது. அப்பொழுது கல்லூரிக்குப் புதிய அதிபராக வேணுகா சண்முகரட்ணம் நியமிக்கப்பட்டிருந்தார்.

வழிபாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வேணுகா சண்முகரட்ணமும், பழைய மாணவர்களும், ஆசிரியர்களும் எடுத்த முயற்சியால் ஆலயத்திருப்பணிகள் அவசரமாக முடித்துத் தரப் பட்டன. கீழ்மாடி வேலைகள் முற்றாகத் திருத்தப்படாத நிலையிலும் தாமதிக்கப்பட்ட சில திருப்பணிகளை விரைவுபடுத்த சேர். பொன். இராமநாதன் அவர்களின் வழித்தோன்றல் D.M சுவாமிநாதன் (பா.உ) அவர்களும் இந்துமாமன்றத் தலைவராக இருந்த க.நீலகண்டன் அவர்களும், பேராசிரியர் க. சிற்றம்பலம் அவர்களும் ஒத்துழைத்து எடுத்த கடும் முயற்சியால் மகாகும்பாபிடேகம் நடைபெற இறைவன் திருவருள் கிட்டியது. நல்ல உள்ளம் படைத்தவர்களின் உதவியால் நடராஜர் ஆலயம் புதுப் பொலிவும் இளமையும் பெற்று எழுந்து நிற்கின்றது. அதிபர் திருமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வே.சண்முகரட்ணம் தலைமையில் 21.06.2012 இல் குடமுழுக்குப் பெருவிழா சிவகாமசுந்தரி நடராஜப் பெருமானுக்கு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து புதிய அதிபராக நியமிக்கப்பட்ட திருமதி. கமலராணி கிருஷ்ணபிள்ளை அவர்கள் கல்லூரி நடவடிக்கை களையும், ஆலய பூசை முறைகளையும் கவனித்து வருகின்றார். ஆயலத்திற்கெனப் பூந்தோட்டம் அமைந்துள்ளது. அதில் விடுதி மாணவர்கள் மலர்களைப் பறித்து நடராஜப் பெருமான் பூசைக்குக் கொடுத்தலோடும் சரம், மாலைகள் கட்டி அணிவித்து திருமுறை களைப் பண்ணோடிசைத்தும் காலை, மாலை வேளைகளில் பூசையிற் கலந்து கொள்வதும் ஆரம்ப காலந் தொட்டு நடை முறையில் இருந்து வருகின்றது. இதனைச் சுட்டிக் காட்டிய திரு. சு.நடேசபிள்ளை அவர்கள் "பொன்பூத்த மேனியர்கள் பூக் கொய்து பரமனுக்குப் பன்மாலை அணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரி" என்று பாடி வைத்துள்ளார். சேர். பொன். இராமநாதன் அவர்களின் நோக்கம் கல்லூரியால் கடைப்பிடிக்க வேண்டியது ஒன்றாகும். ஒரு நூற்றாண்டைக் கண்ட நினைவாலயங்கள் பல பிரமுகர்களின் ஆசியுடன் நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடியது.

## சேர். பொன் இராமநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் (கி.பி 1851 - 1930)

இவர் சைவத்தமிழ் பெருங்குடி மகன். மானிப்பாயைச் சேர்ந்த செல்லாச்சி அம்மையாருக்கும் பொன்னம்பலம் முதலியாருக்கும் தவப்புதல்வனாக அவதரித்தவர். 80 ஆண்டுகள் வாழ்ந்து இறை நிலை அடைந்தவர். அவர் மக்களுக்காற்றிய சேவை அளப்பரியது. இவரது பிறப்பு அருட்கடாட்சம் நிரம்பியதாகும்.

1851ஆம் ஆண்டு மே மாதம் பொன்னம்பல முதலியார் தன் மனைவியோடு தென்னிந்திய தல யாத்திரை செய்தார். இராமேஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரத்தை வந்தடைந்தபோது இராமேஸ்வரப் பெருமானை நோக்கி, "ஐயனே! எல்லா வகை நலன்களும் அமைந்த சற்புத்திரனை தந்தருளல் வேண்டுமென்றும், அவ்வாறு தேவரீர் அருள் புரிந்தால் அடியேன் தேவரீருடைய திருநாமத்தையே இடுவேன்" என்றும் வேண்டிக் கொண்டார்.

அடியாருக்கு எளியவனான இறைவன் பொன்னம்பல முதலி யாருக்கு அருள்புரிந்தார். அதன் பேறாக 1851ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் திகதி ஆண்குழந்தையொன்று பிறந்தது. பொன்னம்பல முதலியார் இராமேஸ்வரப் பெருமானுடைய பெயரை அக்குழந் தைக்கு இட்டு "இராமநாதன்" எனப் பெயர் சூட்டினார். அவருடைய தமயனார் குமாரசுவாமி ஆவர். தம்பியார் அருணாசலமாவர்.

இவ்வாறு பொன்னம்பலம் முதலியார் மூன்று புதல்வர்களுடன் இனிது வாழ்ந்துவருங் காலத்தில் மனைவியை மிக இளைய வயதில் இளந்தார். தாயை இழந்த இராமநாதனும் சகோதரர்களும் பாட்டி யான விசாலாட்சி அம்மையாரின் அரவணைப்பில் வளர்ந்தனர். கொழும்பு இராணிக் கல்லூரியிலும் சென்னை இராசதானிக் கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்தனர். இவர்களது கல்வியில் வழிகாட்டிகளாக விளங்கியோர். சி.வை. தாமோதரம்பிள்ளை, சோ. முத்துக்குமாரசுவாமி, சேர். ரிச்சாட் மோகன் என்போரைக் குறிப்பிடலாம். இராமநாதன் ரிச்சாட்மோகனிடம் சட்டக்கல்வியை நன்கு கற்று 1873 இல் நியாயவாதியானார். 1879இல் சட்ட நிரூபண சபையில் படித்த இலங்கையர் என்ற பெருமையோடு அங்கம் வகித்தார். 50 ஆண்டுகள் அரசியல் பணிக்குத் தன்னை அர்ப் பணித்து மக்களுக்குச் சேவை புரிந்தார். இனமத மொழி வேறு பாடின்றி ஏழை மக்கள் குரலாக அரசியலில் ஒலித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கல்விப் பணிக்கு எடுத்துக் காட்டாக இருப்பவை, இராமநாதன் கல்லூரி, தற்போது யாழ். பல்கலைக்கழகமாக இருக்கும் பரமேஸ்வராக் கல்லூரிகளாகும். பெண் கல்வியில் வியத்தகு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் சேர். பொன். இராம நாதன் ஆவர். தனது சொத்துக்கள் யாவும் பரமேஸ்வரன் சொத்து என்றே கூறுவார். யாவற்றையும் மக்கள் சேவைக்காக அர்ப்பணித்த மகானாவர்.

சமயத்துறையில் கல்லூரிகளோடு இணைத்துக் கட்டிய நடராஜர் ஆலயம், பரமேஸ்வரன் ஆலயம் பொன்னம்பல வாணேச்சரர் ஆலயம் என்பன நினைவாலயங்களாக விளங்கு கின்றன.

இவரது பணிகளால் கல்வி, சமயம், சமூகம், அரசியல் எனப் பல்துறைப் புகழீட்டியவர். விவேகானந்தருக்குப் பின் உலக நாடுகளில் ஞானமுழக்கம் செய்தவர் சேர்.பொன். இராமநாதன்.

கல்வியே ஒருவனைச் சுதந்திரமாக நாட்டுக்கு நற்பிரசையாக வாழவைக்கும் என்ற உயர் நோக்கத்தால் மகத்தான பணிகளாக கல்லூரிகளைத் தோற்றுவித்தார். இவரால் ஔவைநாயகியின் ஆத்திசூடி, மந்திரவிளக்கம், செந்தமிழ் இலக்கணம், திருக்குறட் பாயிர இராமநாத பாஷ்யம், பகவத்கீதை மொழி பெயர்ப்பு விருத்தியுரை என்பன எழுதப்பட்டன.

பல்துறைப் பணிபுரிந்த பெருமகன் அருட்பரானந்த சுவாமி களைக் குருவாகப் பெற்று, ஞான வாழ்க்கை வாழ்ந்து 1930 இல் இறைபதம் அடைந்தார். இவரது பூதவுடல் சமாதி ஆலயத்துள் வைக்கப்பட்டு லிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இராம நாதேஸ்வரம் என்ற பெயரோடு இவ்வாலயம் விளங்கி அருள் பாலிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/இராமநாதன் கல்லூரி
# பழைய மாணவர் சங்க
# நிர்வாக உறுப்பினர்கள் விபரம் - 2015

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திருமதி.க.கிருஷ்ணபிள்ளை |
| உபதலைவர் | :- | திருமதி.ந.சிவராஜன் |
| | | திருமதி.கு.விஜயரகுநாதன் |
| செயலாளர் | :- | திருமதி.சி.கமலராஜன் |
| பொருளாளர் | :- | திருமதி.அ.சண்முககுமார் |
| காப்பாளர் | :- | திருமதி.கு.அப்புத்துரை |
| | | பேராசிரியர் திருமதி.க.இராமநாதன் |
| உறுப்பினர்கள் | :- | திருமதி.ந.சண்முகநாதன் |
| | | திருமதி.வி.ஜெயராஜா |
| | | திருமதி.நா.சண்முகரட்ணம் |
| | | திருமதி.வி.பிரதாபன் |
| | | திருமதி.சி.சிறிதரன் |
| | | திருமதி.த.குமாரதாஸ் |
| | | திருமதி.வை.கணேசபிள்ளை |
| | | திருமதி.ஜெ.ஆனந்தகௌரி |
| | | திருமதி.பா.ஈஸ்வரன் |
| | | திருமதி.க.மகாலிங்கசிவம் |
| | | செல்வி.ஜெ.கனகலிங்கம் |
| | | திருமதி.இ.பாலசிங்கம் |
| | | திருமதி.நீ.ஜெகதீஸ்வரன் (கணக்காய்வாளர்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



*மருதனார்மடம் - சுன்னாகம்*

*இராமநாதன் கல்லூரியில் அமர்ந்து அருள்புரியும்*

# இராமநாதேஸ்வரர் திருவூஞ்சல்

**புனராவர்த்தன மகாகும்பாபிஷேக**

**மண்டலாபிஷேகப் பூர்த்தி தின வெளியீடு :**

**பழைய மாணவர் சங்கம், இராமநாதன் கல்லூரி.**

**வெளியிடுபவர் :-**

திருமதி.கனகேஸ்வரன் சரஸ்வதி
பழைய மாணவி.

**ஆக்கம் :- திருமதி பண்டிதை வை.கணேசபிள்ளை**

**18-07-2003**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதேஸ்வரப் பெருமான் திருவூஞ்சல்

## காப்பு

ஏரார்ந்த பொழில்விளங்கு எழில்சூழ்ந்த
மருதனார் மடத்தில் மேவியுயர்
பாரார்ந்த புகழ்படைத்த இராமநாதன்
கல்லூரி வளாகத்தின் முன்றலிலே
சீரார்ந்த சிறப்புடனே வீற்றிருக்கும்
இராமநாத ஈஸ்வரர்மேல் ஊஞ்சல்பாட
காரார்ந்த கருணை மழைபொழியும்
கணபதியாம் பரராசசேகரனே காப்பு.

1. பக்தியுடன் பரவும் அடியவர்தம்
அகலாத அன்பதுவே வடங்களாக
முத்தி பெற வழிகாட்டும் ஞானிகளின்
உள்ளமே உகந்த பீடமாக
கொத்துமலர்க் கோதை பார்வதியும்
இடமாய் இனிதமர்ந்த கோவே
நித்த மருள் பொலி மருதனார் மடமுறையும்
இராமநாத ஈஸ்வரரே ஆடீரூஞ்சல்.

2. நந்தியொடு நாரதரும் இசைகள்பாட
நாரணனும் நான்முகனும் வடந்தொட்டாட்ட
முந்திவந்த பூதகணம் பொலிந்துஆட
பூமகளும் நாமகளும் வாழ்த்துக்கூற
கந்தமலர்தூவிப் பணிப்பெண்கள் வந்து
வழிபாடுசெய்து நின்று, நடனமாட
எந்தை இராம நாதஈஸ்வரரே இறைவியொடு
இங்கிதமாய் இனிதமர்ந்து ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வேதவொலி மந்திரங்கள் பூசனைகளேற்று
பாடுமடியவரின் பண்ணிசையும் கேட்டு
தீதகற்றும் திருவிழாப் பொலிவுங்கண்டு
உளமகிழும் இராமநாத ஈஸ்வரரே
போதுமலர்க் கரங்கள் கூப்பி வழிபாடாற்றும்
அடியவர்தம் அகத்திருளை அகற்றியென்றும்
ஆதியயன் மாலொடு அகில மெல்லாம்வாழ
அருள்பொழிந்து நின்று ஆடீரூஞ்சல்.

4. பொன்கொன்றை தாதுசிந்திப் பொலிந்திலங்கப்
பொருந்திய நற்பூமரங்கள் அலங்கரிக்க
தேன்சிந்தும் கனிகள்தரும் மாமரங்கள்
பலாமரமும் வாழையொடு வில்வமேவி
வான்சிந்தும் மாமழையால் பொலிந்திலங்கும்
வாழிடங்கள் வனப்புமிக்க மரநிழற்கீழ்
மன்னும் மருதனார் மடமுறையும் மாமணியே
இராமநாத ஈஸ்வரரே ஆடீரூஞ்சல்.

5. செந்தமிழும் செழுங்கலையும் ஓங்குபதி
மருதனார் மடமுறையும் தேவதேவே
பைந்தமிழில் பண்ணிசைத்துப் பாடலோடு
ஆடல்கண்டு மகிழப்பெரும் பார்புகழும்
இராமநாதன் கல்லூரிவளாகந் தன்னில்
நுண்கலைப் பீடந்தனை நன்கமைத்தீர்
சீர்பரவும் சிறப்புடையோய் இராமநாத
ஈஸ்வரரே அருள்சிறக்க ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கருதரிய சிற்சபையில் நிர்த்தமிடும்
கருணாகரக் கடவுளே கருணைக்கடலே
அரிபிரமாதி யார்க்கும் காண்டற்கரிய
சிவனே கற்பகமே இராமநாதேஸ்வரா
திரிபுரமெரித்தாயன்று தீயவர்க்கு அருளும்
செய்தாய் முக்கண்ணா முனிவரேறே
வருமிடர் களையவென்று கல்லூரியமர்ந்த
எங்கள் இராமநாதேஸ்வரரே ஆடீரூஞ்சல்.

7. ஏழுலகும்வாழ ஆகமங்கள்வாழ மறைவாழ
சைவநெறி தானும் வாழச்
சூழுலகில் அரசரோடு அறவோர்வாழ
அந்தணரும் ஆனினமும் மகிழ்ந்துவாழ
நீழுலகம் நீதியுடன்நின்று நீடுவாழ
பூவையர்தம் கற்புநெறி பொலிந்துவாழ
வாழும் மருதனார்மடம் உறையும் செல்வ
இராமநாத ஈஸ்வரரே ஆடீரூஞ்சல்.

8. கங்கையும் மதியுமாடக் காதிலணி
கண்டிகையும் செஞ்சடையும் மானுமாட
அங்கையினில் ஏந்துமனலுமாட அணிசெய்
உடுக்குடனே படம்விரித்து அரவுமாட
நங்கையவள் பார்வதியும் நயந்துஆட
பல்லப்ப வைரவரும் முன்னின்றாட
பொங்கரவம் அசைந்தாடும் இராமநாத
ஈஸ்வரரே அருள்பொலிய ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. இந்திரனும் சந்திரனும் இமையவரும்
போற்றநாளும் நயந்து ஆடீரூஞ்சல்
தொந்திக் கணபதியும் குமரேசனோடு
சேர்ந்து மகிழ்ந்திடவே ஆடீரூஞ்சல்
தக்கனுக்குத் தக்கபடி தலையைக்கொய்து
தண்டனைகள் தந்தவரே ஆடீரூஞ்சல்
திக்கற்றவர் புகலிடமே ஆடீரூஞ்சல்
திருமேவும் பெருமானே ஆடீரூஞ்சல்.

10. முத்துமணித் தாமமாட ஆடீரூஞ்சல்
முழுவைரத் தோடாட ஆடீரூஞ்சல்
உத்தரியப் பட்டாட ஆடீரூஞ்சல்
உத்தமி பார்வதியுடனே ஆடீரூஞ்சல்
சித்தம் களிகூர ஆடீரூஞ்சல்
பத்தர்கட்கு அருள்செய்ய ஆடீரூஞ்சல்
எத்திக்கும் புகழ்மணக்க ஆடீரூஞ்சல்
எந்தை இராமநாதேஸ்வரரே ஆடீரூஞ்சல்

## வாழி

திருவிழிகள் ஓர் மூன்றும் வாழி வாழி
திங்களுஞ் செஞ்சடையும் வாழி வாழி
திருப்புயங்கள் இரண்டும் வாழி வாழி
செழுங்கருணைத் திருவருளும் வாழி வாழி
திருமுறைகள் பன்னிரண்டும் வாழி வாழி
திருமறைகள் ஒரு நான்கும் வாழி வாழி
திருவிளங்கும் கல்லூரி வாழி வாழி
கல்வி கற்கும் மாணவரும் வாழி வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெய மங்களம்

பார்வதி சமேதருக்கு ஜெயமங்களம்
பல்லுயிரும் காப்பவற்கு ஜெயமங்களம்
ஊரும் பேரும் அற்றவற்கு ஜெயமங்களம்
மருதனார் மடத்துறைபவற்கு ஜெயமங்களம்
ஆண்டி வேடம் பூண்டவற்கு ஜெயமங்களம்
அம்பலத்தில் ஆடுவாற்கு ஜெயமங்களம்
வேண்டும் வரம் தருவோற்கு ஜெயமங்களம்
வெள்ளை ஊர்தி வாகனற்கு ஜெயமங்களம்.

## எச்சரீக்கை

பஞ்ச பூதமானவா பழவினை தீர்ப்பவா
வேதாகமமானவா எச்சரீக்கை
வஞ்சகப் பேய்களை வேரோடொழிப்பவா
மருதனார்மடத்துறைபவா - எச்சரீக்கை
ஆண்டி, அரசன், வேடன், புலவனாய்
புலையனாய் குருவாய் வந்தவா எச்சரீக்கை
வேண்டிய வரங்கள் தந்து சைவநெறி காப்பவா
பார்வதியின் மணவாளா (பரமனே) எச்சரீக்கை.

## பராக்கு

கல்லூரி வளாகத்தில் அமைந்தவரே பராக்கு
நல்லபதி மருதனார்மடப் புண்ணியனே பராக்கு
விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் மேலானவனே பராக்கு
கண்ணை இமைகாப்பது போல் காப்பவனே பராக்கு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

தேவ லாலி சிவயோக லாலி - அவனி
துயர் துடைக்கும் தூய லாலி
போக லாலி பரஞ்சுடரே லாலி - சிவ
கங்கை சுமந்த பெருமானே லாலி
சூல லாலி சுடர்கொடியே லாலி - போர்
அரக்கர் குலமழித்த கோவே லாலி
மூல லாலி மூவா முதலே லாலி - என்றும்
எம்மிடர் களைவாய் தாயே லாலி.

சுபம்.


**ஆக்கம் : திருமதி. வை.கணேசபிள்ளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் கல்லூரி ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org